செ.வெ.எண்: 255 நாள்: 16.05.2024

**புதுக்கோட்டை மாவட்டம்**

**10 -ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களை சிறப்பு பயிற்சி வகுப்பின் வாயிலாக துணைத்தேர்வில் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும் -**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையாசிரியர்களின் மீளாய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், 10-ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வின் தேர்ச்சி பகுப்பாய்வு குறித்து தலைமையாசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.05.2024) நடைபெற்றது.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;**

தமிழக அரசு மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் பள்ளிகல்வித்துறையின் சார்பில் பல்வேறு பணிகள் மாணவ, மாணவிகளின் நலனிற்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு, நகராட்சி, ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வின் தேர்ச்சி பகுப்பாய்வு குறித்து தலைமையாசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக அரசு, நகராட்சி, ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளிகளில் 2024 -ஆம் ஆண்டு 10 -ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் பள்ளி வாரியாக தேர்ச்சி அறிக்கை, பாடவாரியாக சராசரி மதிப்பெண், தேர்ச்சி பெறாத மாணவர்கள் விபரம், 1 பாடம், 2 பாடம், 3 பாடம், 4 பாடம், 5 பாடம் ஆகியவற்றில் தேர்ச்சிப்பெறாத மாணவர்களின் விபரம், தேர்ச்சி பெறாத மாணவர்கள் காலாண்டு, அரையாண்டுத் தேர்வில் பெற்ற மதிப்பெண், வருகை சதவீதம், தேர்ச்சி பெறாமைக்கான காரணம், இந்த கல்வியாண்டில் 100 சதவீதம் பெறுவதற்கான இலக்கு ஆகியவை குறித்து தலைமையாசிரியர்களிடம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பள்ளிக்கு சரியாக வருகை புரியாத மாணவர்கள் குறித்த விபரத்தினை பள்ளி மேலாண்மைக்குழு மற்றும் பள்ளியின் நலனில் அக்கறையுள்ளவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அத்தகைய மாணவர்களை தொடர்ந்து பள்ளிக்கு வருகை புரிவதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக 3 நாட்களுக்கு மேல் பள்ளிக்கு மாணவிகள் வராமல் இருந்தால் அது பற்றிய தகவலை உடனடியாக வருவாய்த்துறையினருக்கு தலைமையாசிரியர்கள் தெரியப்படுத்திட வேண்டும்.

10 -ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் அனைவரையும் துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்க செய்து, சிறப்பு பயிற்சி வகுப்பு வாயிலாக துணைத்தேர்வில் தேர்ச்சி பெறச் செய்து 11 -ஆம் வகுப்பில் சேர்ந்து தொடர்ந்து பயில்வதற்கு வழிகாட்டிட வேண்டும். பள்ளியின் தேர்ச்சி சதவீதத்தினை அதிகரித்திட தலைமையாசிரியர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு பள்ளித் தலைமையாசிரியரும் ஆசிரியர்களுக்கு தூண்டு கோலாக இருந்து இந்த ஆண்டு தேர்ச்சி சதவீதத்தினை அதிகப்படுத்திட வேண்டும். மேலும் 100 சதவீத தேர்ச்சியினை பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.அப்தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முருகேசன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, மாவட்டக் கல்வி அலுவலர்கள் திரு.ரமேஷ் (புதுக்கோட்டை), திருமதி.ராஜேஸ்வரி (அறந்தாங்கி), தலைமையாசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai